**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – சிறப்புப் பள்ளிகள் – 2018–2019ஆம் நிதியாண்டில் அரசு சிறப்புப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்துதல் – கணினி ஆய்வகம் அமைத்தல் மற்றும் தொழிற் பயிற்றுநர்களை நியமனம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 35** **நாள்: 11.09.2018**
**விளம்பி – ஆவணி, 26**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண் 4977/சி.ப.–2/2018, நாள் 20.06.2018.

----------

**ஆணை:**

2018–2019ஆம் நிதியாண்டுக்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்கள் 06.06.2018 அன்று ஏனையவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை செய்துள்ளார்கள்:–

“தற்போது சிறப்புக் குழந்தைகளின் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு குறிப்பாக செவித்திறன் குறையுடைய, பார்வைத்திறன் மற்றும் கடும் கை, கால் ஊனமுற்ற குழந்தைகள் நலனுக்காக செயல்பட்டு வரும் 21 அரசு சிறப்புப் பள்ளிகளில் கணினிப் பயிற்சிகள் வழங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிக்காக கணினி மற்றும் தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்ய மொத்தம் ரூ.85.00 இலட்சம் ஒதுக்கீடு செய்தும், இப்பயிற்சி வழங்குவதற்காக கணினி தொழிற்பயிற்சி ஆசிரியர்களை ரூ.15,000/– மாத தொகுப்பூதிய அடிப்படையில் 20 சிறப்புப் பள்ளிகளில் ரூ.36.00 இலட்சம் நிதியில் நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு கணினி பயிற்சி வழங்குவதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிக்கான இத்திட்டம் ரூ.121.00 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்படும்”.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் 22 அரசு சிறப்புப் பள்ளிகளில், தாம்பரத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்தைத் தவிர்த்து, மீதம் உள்ள 21 அரசு சிறப்புப் பள்ளிகளில் கணினிப் பயிற்சிகள் வழங்கிட ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு “கணினி ஆய்வகம்” அமைத்திட ரூ.83,78,000/– மற்றும் தாம்பரம் மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் மற்றும் திருச்சிராப்பள்ளி பார்வைத் திறன் குறையுடையோருக்கான பெண்கள் மேல்நிலைப் பள்ளியினைத் தவிர்த்து மீதமுள்ள 20 சிறப்புப் பள்ளிகளில் தொழிற் பயிற்றுநர்களை (Vocational Instructors - Computer Science) மாதம் ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்வதற்கு தொடரும் செலவினமாக ரூ.36,00,000/– என ஆக மொத்தம் ரூ.1,19,78,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மேற்காணும் அறிவிப்பின் படி, தொழிற் பயிற்றுநர்கள் நியமனம் செய்யப்பட உள்ளதால், தருமபுரி,

[த.பி.பா.]

தஞ்சாவூர், ஈரோடு மற்றும் காஞ்சிபுரம் செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளி மற்றும் பூவிருந்தவல்லி பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளி ஆகிய ஐந்து அரசு சிறப்புப் பள்ளிகளில் ஏற்கனவே மாத தொகுப்பூதியத்தின் அடிப்படையில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கணினி பயிற்றுநர் பணியிடங்களை ஒப்புவிப்பு செய்யுமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, பின்வருமாறு ஆணையிடுகிறது:–

(i) தாம்பரம் மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்தில் மாணவர்களுக்கு கணினி பயிற்சி வழங்கும் தேவை எழாது என்பதால், இந்நிறுவனத்தினைத் தவிர, ஏனைய **21** அரசு சிறப்புப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும் விதமாக, ஒவ்வொரு சிறப்புப் பள்ளியிலும் கணினி ஆய்வகம் அமைத்திட பின்வருமாறு தொடராச் செலவினமாக **ரூ.83,78,000/–**க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது:–

| வ. எண் | பள்ளிகளின் விவரம் | பள்ளிகள் எண்ணிக்கை | கணிப்பொறிகளின் எண்ணிக்கை | கணிப்பொறி வாங்குவதற்கான செலவினம் | மேஜை மற்றும் நாற்காலிக்கான செலவினம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | மேல்நிலைப் பள்ளிகள் | 05 | 12 x 05 = 60 எண்ணிக்கை | ரூ.33,00,000 | ரூ.2,40,000 | ரூ.35,40,000 |
| 2. | உயர்நிலைப் பள்ளிகள் | 05 | 7 x 05 = 35 எண்ணிக்கை | ரூ.19,25,000 | ரூ.1,40,000 | ரூ.20,65,000 |
| 3. | நடுநிலைப் பள்ளிகள் | 07 | 5 x 07 = 35 எண்ணிக்கை | ரூ.19,25,000 | ரூ.1,40,000 | ரூ.20,65,000 |
| 4. | ஆரம்பப் பள்ளிகள் | 04 | 3 x 04 = 12 எண்ணிக்கை | ரூ.6,60,000 | ரூ.48,000 | ரூ.7,08,000 |
| | **மொத்தம்** | **21** | | **ரூ.78,10,000** | **ரூ. 5,68,000** | **ரூ.83,78,000** |

(ii) தாம்பரம் மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் மற்றும் திருச்சிராப்பள்ளி பார்வைத் திறன் குறையுடையோருக்கான பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றைத் தவிர மீதமுள்ள **20** சிறப்புப் பள்ளிகளுக்கு தொழிற் பயிற்றுநர்களை (கணினி அறிவியல்) (Vocational Instructors - Computer Science) மாதம் **ரூ.15,000/–** தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்திட **12** மாதங்களுக்கு தேவைப்படும் தொடர் செலவினம் **ரூ.36,00,000/–**க்கு நிதி ஒப்பளிப்பும் ஆக மொத்தம் இத்திட்டத்திற்கென **ரூ.1,19,78,000/–** **(ரூ.83,78,000 + ரூ.36,00,000)** நிதி ஒப்பளிப்பு செய்தும் இச்செலவினத்தினை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகள் நல ஆணையருக்கு அனுமதியும் வழங்கப்படுகிறது. (மற்றும்)

(iii) மேற்படி சிறப்புப் பள்ளிகளில் தொழிற் பயிற்றுநர்கள் நியமனம் செய்யப்படுவதனைக் கருத்திற்கொண்டு, பின்வரும் சிறப்புப் பள்ளிகளில் ஏற்கனவே தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ள கணினி பயிற்றுநர் பணியிடங்கள் ஒப்புவிப்பு (surrender) செய்யப்படுகிறது:–

| வ. எண் | பள்ளியின் பெயர் | தொகுப்பூதிய விவரம் (மாதம்) | பணியிடம் ஒதுக்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1. | செவித்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தருமபுரி. | ரூ. 3,750/– | அரசாணை (நிலை) எண். 95, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.9) துறை, நாள் 17.05.2005. |
| 2. | செவித்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர். | ரூ.6,000/– | அரசாணை (நிலை) எண். 110, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.9) துறை, நாள் 14.08.2009. |

| | | | |
|---|---|---|---|
| **3.** | செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி, ஈரோடு. | ரூ.**6,000/–** | அரசாணை (நிலை) எண். **110**, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.**9**) துறை, நாள் **14.08.2009.** மற்றும் அரசு கடிதம் (நிலை) எண். **161**, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.**9**) துறை, நாள் **23.12.2009.** |
| **4.** | செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம். | ரூ.**6,000/–** | அரசாணை (நிலை) எண். **110**, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.**9**) துறை, நாள் **14.08.2009.** |
| **5.** | பார்வைத் திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி. | ரூ.**6,500/–** | அரசாணை (**2**டி) எண்.**53**, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.**9**) துறை, நாள் **19.12.2006.** |

(iv) மேற்கண்ட (பத்தி–**3**, iii) ஒப்புவிப்பு பணியிடங்களை (Surrender Posts) தொடராணை கோரும் கருத்துருவிலிருந்து நீக்கம் செய்ப்பட வேண்டும்.

**4.** மேலே பத்தி–**3**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| **Sl. No.** | **Head of the Account** | **Amount required (in Rs.)** |
|---|---|---|
| 1. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-AA – School for the Blind-76 Computer and Accessories-01 Purchase.<br>[D.P. Code: 2235-02-101-AA-7617] | 34,65,000 |
| 2. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-AR – Schools for the Deaf-76 Computer and Accessories-01 Purchase.<br>[D.P. Code: 2235-02-101-AR-7613] | 40,70,000 |
| 3. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-BE – School for the Severely affected Orthopaedic Differently Abled Persons-76 Computer and Accessories-01 Purchase.<br>[D.P. Code: 2235-02-101-BE-7618] | 2,75,000 |
| 4. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-AA – School for the Blind-05 Office Expenses-05 Furniture.<br>[D.P. Code: 2235-02-101-AA-0552] | 2,52,000 |
| 5. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-AR – Schools for the Deaf-05 Office Expenses-05 Furniture.<br>[D.P. Code: 2235-02-101-AR-0558] | 2,96,000 |
| 6. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-BE – School for the Severely affected Orthopaedic Differently Abled Persons-05 Office Expenses-05 Furniture.<br>[D.P. Code: 2235-02-101-BE-0053] | 20,000 |

| | | |
|---|---|---|
| 7. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-AA – School for the Blind-33 Payments for Professional and Special Services-04 Contract Payment.<br>[D.P. Code: 2235-02-101-AA-3344] | 16,20,000 |
| 8. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-AR – Schools for the Deaf-33 Payments for Professional and Special Services-04 Contract Payment.<br>[D.P. Code: 2235-02-101-AR-3340] | 18,00,000 |
| 9. | 2235 – Social Security and Welfare – 02 Social Welfare – 101 – Welfare of Differently Abled Persons – State's Expenditure-BE – School for the Severely affected Orthopaedic Differently Abled Persons-33 Payments for Professional and Special Services-04 Contract Payment.<br>[D.P. Code: 2235-02-101-BE-3345] | 1,80,000 |
| | **Total** | **1,19,78,000** |

**5.** மேலே பத்தி–3ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.79,77,000/– 2018–2019ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும், 2018–2019ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி–3இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2018–2019ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இத்தொகையை சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (சந/வ.செ.பொ–I) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா எண் 43502/நிதி (ச.ந.)/2018, நாள் 07.09.2018–ல் பெறப்பட்ட ஒப்புதல் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்ணுடன் 1230 (ஆயிரத்து இருநூற்று முப்பது) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை–5.
சம்பந்தப்பட்ட அரசு சிறப்புப் பள்ளிகள்.
(மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18.

[த.பி.பா.]

**<u>நகல்:</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்,
சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொது I&II)த் துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்